முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 590**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

11.05.2021, செவ்வாய்கிழமை

1. ஞானபலன் கொண்ட அரங்கா போற்றி
ஞானிகள் துணைபட கலியுக மாற்றம்
ஞானயுகமாற்றமாக செய்ய வந்த மாதவசியே
ஞானதேசிகனே உமை போற்றி போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட இந்த கலியுகம் தானும்
அரங்கன் சக்தியால் ஞானயுகமாகும்
3. மாற்றம் செய்து அரங்கனுள் யானிருந்து மகத்துவம் உலகோருக்கு அருளிவர
வருகின்ற அரங்கன் ஞானிகள்பூஜையாலும் வல்லமைபட அரங்கன் தருகின்ற தர்மத்தாலும்
ஆறுமுகன் என் ஆசியாலும் இந்த கலியுகம்
ஆற்றல்பட ஞானயுகமாற்றம் பெறும்
4. மாற்றம் தர வந்த தவசி
மக்களை மீட்கவந்த ஞானி
ஏற்றம் தரும் ஓங்காரக்குடில் நோக்கி
இவ்வுலகோர் தொடர்பு கொண்டு வருதல் காண
5. காணவே அவரவர்க்கும் ஞானபலம் கூடி
கலியுகத்தில் அழியாமை தனை பெற்று
ஞானவானாய் ஞானஆட்சிக்கு உண்டான
நல் தலைமைகள் ஓங்கி இந்த கலியுகம்
6. கலியுகம் அரங்கன் ஆசியாலும் அருளாலும் அரங்கன் அறத்தாலும் சடுதி மாற்றம்
அழியாமை நிறைந்த ஞான யுகமாக ஆற்றல்பட அரங்கன் தயவால் காணும்
காணவே உயர்வான தொண்டர் படைகளை
கலியுகத்தில் கொண்ட அரங்கன் சீடர்கள் வழி
7. சீடர்கள் வழி இந்த அற்புதம்
சிறப்புற அரங்கனால் நிறைவேறும்
மறுப்பின்றி உலகோர் வர
மண்ணுலகம் சடுதி மாற்றம் கண்டு சிறப்பு பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.